# அரக்கோணம் நகராட்சி
## சாதாரண மன்ற கூட்ட அறிவிப்பு

**கூட்ட எண்.02** **நாள்.21.01.2022**

பொருள் சாதாரண மன்ற கூட்டம் – அரக்கோணம் நகராட்சி –
நாள்.24.01.2022 திங்கள் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு
சாதாரண கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக,

------

அரக்கோணம் நகராட்சி 24.01.2022 திங்கள் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சாதாரண மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள்கள் விவரம்.

**ஆணையர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**

**பொருள் எண்.01**

நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் டிசம்பர்/2021 மாதங்களின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.**

**பொருள் எண்.02**

அரக்கோணம் நகராட்சியின் 202220–23 ஆம் நிதியாண்டிற்கு கீழ்கண்ட செலவினங்களுக்கு பொது அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

1) தினசரி நாளிதழ்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளி இதர (ம) அரசின் திட்டங்கள் ,வரிவசூல் ,ஏலம் , நகராட்சி தொடர்புடைய விளம்பரங்களை மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலக மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் வெளியீடு செய்வதற்கான கட்டணங்கள்.

2) நகராட்சி சார்பில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளுக்கான அனுமதிக்கப்பட்ட வழக்கறிஞர் கட்டணம் செலுத்துதல்.

3) இந்நகராட்சி பணி நிமித்தம் ஆணையாளர் பொறியாளர் , மற்றும் இதர நகராட்சிப் பணியாளர்கள் மேற்கொள்ளும் பயிற்சி அலுவலக பணி நிமித்தம் தொடர்பான பயணங்களுக்கான , பயணப்பட்டியல்களுக்கான தொகை வழங்குதல்.

4) பணியாளர்களுக்கான பண்டிகை முன்பணங்கள் சிறப்பு சேமநல நிதி மற்றும் ,திருமணக்கடன் , இதர அத்தியாவசிய – நகராட்சி பங்கு தொகை முன்பணங்கள் வழங்குதல்.

5) நகராட்சி வரிவசூல் மற்றும் பல்வேறு திட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வை பொது மக்களிடம் தெரிவிக்க ஆட்டோ செலவினங்கள் (ம) மைக் விளம்பரக்கட்டணங்கள் மேற்கொள்ளுதல்.

6) தமிழ்நாடு நகரியில் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்தப்படும் பங்களிப்பு தொகைகள்செலுத்துதல்.

7) நகராட்சி அலுவலர்கள் பணியாளர்கள் மேற்கொள்ளும் பயிற்சிக்கான கட்டணங்கள் (ம) செலவினங்கள் மேற்கொள்ளுதல்.

8) நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை–28 மற்றும் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகம் வேலூர்–12 அவர்களால் கோரப்படும் சில்லரை செலவினங்களுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

<u>அலுவலக குறிப்பு</u>20 –: 2220–23 ஆம் ஆண்டிற்கான மேற்காணும் செலவினங்களுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.105/2021/சி1)

**பொருள் எண்.03**

அரக்கோணம் நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள மலிவு விலை அம்மா உணவகத்திற்கு தேவையான மளிகை பொருட்கள் ,அரிசி ,காய்கறி மற்றும் தயிர் ,எரிவாயு உருளை வாங்கவும் ,மற்றும் அம்மா உணவகத்தில் பணிபுரியும் மகளீர் சுய உதவி குழு பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சி தலைவரின் வழிகாட்டுதலின்படி நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் வழங்குதல் உட்பட ஒரு மாதத்திற்கு தோரயமாக ரூ .30 0000 வீதம் 12,மாதங்களுக்கு 12 **X 300000 ரூ.3600000/–** நகராட்சியின் அம்மா உணவக வங்கி கணக்கிலிருந்து 2022202-3 நிதி ஆண்டிற்கான செலவினத்தை மேற்கொள்ளவும் அரசு நிதி வரும் பட்சத்தில் ஈடு செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு -:மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.04

இந்நகராட்சியில் 2022-23 ம் ஆண்டிற்கு அனைத்துப்பிரிவிற்கும் தேவைப்படும் எழுதுப்பொருட்கள் ,வெள்ளைத்தாள், டோனர்கள் ஆகியவற்றை நிர்வாக நலன் கருதி கூட்டுறவு நிறுவனத்தில் வாங்குவதற்கு தோராய செலவினமாக தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி

அலுவலக குறிப்பு -:மேற்படி 2022-23 ம் ஆண்டிற்கு தேவைப்படும் பொருட்களை எழுதுப்பொருட்கள்,வெள்ளைத்தாள், டோனர்கள் ஆகியவற்றை கூட்டுறவு நிறுவனத்தில் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.05**

அரக்கோணம் நகராட்சியில் கீழ்குறிப்பிட்ட குடிநீர் பணிகளை பொது மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய பின்வரும் பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.18.77 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 1 HP Submerzible Motors 10 எண்ணிக்கைகள் விநியோகம் செய்தல். | 3.00 |
| 2. | 1 HP Submerzible Motors Starters 10 எண்ணிக்கைகள் விநியோகம் செய்தல். | 1.00 |
| 3 | 10 எண்ணிக்கைகள் குடிநீர் விநியோக தொட்டிகள் விநியோகம் செய்தல். | 1.00 |
| 4 | 25 Kg எடை கொண்ட பிளீச்சிங் பவுடர் பைகள் 30 எண்ணிகைகள் விநியோம் செய்தல் | 0.50 |
| 5 | நகராட்சிக்கு சொந்தமான தக்கோலம் தலைமை நீரேற்று நிலைத்தில் உள்ள மின் மாற்றி எண்.I மற்றும் IIல் உள்ள இரண்டு 150 KVA Transformer -களுக்கு Oil Filtration செய்தல். | 2.50 |
| 6 | நகராட்சிக்கு சொந்தமான தக்கோலம் தலைமை நீரேற்று நிலைத்தில் நீர் இரைப்பு செய்யும் 120 HP (Spare) மோட்டாரை பழுது பார்த்து இயக்கி தருதல். | 2.50 |
| 7 | நகராட்சிக்கு சொந்தமான தக்கோலம் தலைமை நீரேற்று நிலைத்தில் உள்ள யூனிட் - I 120 HP மற்றும் யூனிட் - II 125 HPக்கு 80 KVA Capcitor, 2 எண்ணிக்கை Auxilary Condutor மற்றும மின்ன்னு தளவாட பொருட்கள் விநியோகம் செய்தல் | 0.27 |
| 8 | திருப்பாற்கடல் நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் கொண்டு வரும் 12" AC பம்பிங் பிரதான குழாய் உடைப்பு ஏற்பட்டுள்ளதாலும் மேலும் வேலூர் கூட்டு குடிநீர் நகராட்சிக்கு கிடைக்கப்பெறாததாலும் வார்டு எண்.20, 21, 22, 23 மற்றும 33 ஆகிய 5 வார்டுகளில் டிராக்டர் மூலம் குடிநீர் வழங்கல் பணி செய்தல். | 2.00 |
| 9 | தக்கோலம் தலைமை நீரேற்று நிலையத்தில் 2000 லி குளோரின் தொட்டி, மோட்டார் பழுது நீக்கம் செய்தல். குடிநீர் தேக்க தொட்டி அளவுமானி பொருத்துதல் மற்றும் இரயில்வே குடிநீர் அளவு மானி பொருத்துதல். | 6.00 |

**அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**2. வரிசை எண்.4ல் உள்ள பணியினை அரசு அங்கீகாரம் பெற்ற அரக்கோணம் கூட்டுறவு சிறப்பாங்கடியில் கொள்முதல் செய்ய மன்றம்**

அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.06**

அரக்கோணம் நகராட்சி அலுவலக மேற்கூரை பகுதியில் அமைந்துள்ள தமிழ் வாழ்க (LED Board) மற்றும் டாக்டர் B.R அம்பேத்கர் நகர மன்ற கூடம் பலகை பழுதடைந்துள்ளதால் புதுப்பிக்க வேண்டியுள்ளது. தோராய செலவினம் ரூ.1,05,825/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கும் தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.977/இ1/2021)**

**பொருள் எண்.07**

அரக்கோணம் நகராட்சி தக்கோலம் தலைமை நீரேற்றும் நிலையம் மற்றும் கல்லாறு தலைமை நீரேற்றும் நிலையங்களில் உள்ள மின் மோட்டார்கள் மற்றும் தலைமை நீரேற்றும் நிலையங்களை பராமரிக்க நகராட்சியில் பணியாளர்கள் இல்லாததால் தனியார் ஆட்களை கொண்டு நீரேற்றும் நிலையங்களை இயக்க 2022-2023ம் ஆண்டுக்கு பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் வேலூர் அவர்கள் 2022-2023ம் ஆண்டுக்கான நிர்ணயிக்கப்பட்ட தினக்சுலி அடிப்படையில் நீரேற்றும் நிலையங்களை இயக்க தோராய மதிப்பீடு ரூ.13.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு சீரான குடிநீர் வழங்கவும் , குடிநீர், பணியின் அவசியம் கருதியும் , மேற்படி வேலைக்கும் பணிக்கான தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கல்லாறு தலைமை நீரேற்றும் நிலையத்தில் தனியார் ஆட்களை கொண்டு குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 6.50 |
| 1 | தக்கோலம் தலைமை நீரேற்றும் நிலையத்தில் தனியார் ஆட்களை கொண்டு குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 6.50 |
| | மொத்தம் | 13.00 |

**அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**ந.க.எண்.977/இ1/2021**

**பொருள் எண்.08**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக பணிகளுக்கு தேவையான வால்வு ஆப்ரேட்டர் பணியாட்கள் நகராட்சியில் இல்லாத காரணத்தினால் 2022-23 ஆம் ஆண்டிற்கு குடிநீர் பணி மற்றும் இதர பணிக்கு தேவையான ஆட்களை மாவட்ட ஆட்சியர் வேலூர் அவர்கள் 2022-2023ம் ஆண்டுக்கான நிர்ணயிக்கப்பட்ட தினக்சுலி அடிப்படையில் நீரேற்றும் நிலையங்களை இயக்க தோராய மதிப்பீடு ரூ.19.55 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு சீரான குடிநீர் வழங்கவும், குடிநீர், பணியின் அவசியம் கருதியும் , மேற்படி வேலைக்கும் பணிக்கான தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 18 வரை தனியார் ஆட்களை கொண்டு குடிநீர் விநியோக பராமப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 9.95 |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 18 வரை | 9.60 |

| | | |
|---|---|---|
| | தனியார் ஆட்களை கொண்டு குடிநீர் விநியோக பராமப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | |
| | மொத்தம் | 19.55 |

**அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதி வழுங்கலாம்.**

**ந.க.எண்.977/இ1/2021**

**பொருள் எண்.09**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட கல்லாறு தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து அரக்கோணம் நகருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேலும் திருப்பாற்படல் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து வரும் குடிநீர் விண்டர்பேட்டை நீர்உந்து நிலையத்தின் மூலம் நகருக்கு சோடியம் ஹைபோ குளோரைடு கலந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் நகருக்கு வழுங்கப்பட்டு வருகிறது. மேற்படி இடங்களில் சோடியம் ஹைபோ குளோரைடு சொல்யூசன் 2022-23ஆம் ஆண்டிற்கு விநியோகம் செய்ய மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. குடிநீர் பணியின் அவசியம் கருதியும் மேற்படி பணிக்கும் , பணிக்கான தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண் . 977/இ1/2021**

**பொருள் எண்.10**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான அசோக் நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் அலுவலக நீர் தேக்கதொட்டி மூலம் நீரேற்றம் செய்யப்பட்டு சோடியம் ஹைபோ குளோரைடு கலந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் நகருக்கு வழுங்கப்பட்டு வருகிறது. மேற்படி நீர் தேக்க தொட்டிகளில் சோடியம் ஹைபோ குளோரைடு சொல்யூசன் 2022-23ஆம் ஆண்டிற்கு விநியோகம் செய்ய மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. குடிநீர் பணியின் அவசியம் கருதியும் மேற்படி பணிக்கும் , பணிக்கான தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண் . 977/இ1/2021**

**பொருள் எண்.11**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான தக்கோலம் நீரேற்றும் நிலையத்தில் இருந்து நாள் ஒன்றுக்கு சுமார் 3.00 மில்லியன் லிட்டர்கள் வீதம் குடிநீர் நகருக்கு சப்ளை செய்யப்பட்டு வருகிறது. மேலும், ஜீப்ளி ரோடு உயர்நிலை நீர் தேக்க தொட்டி மூலம் குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. எனவே , நகராட்சி மூலம் மேற்படி இடங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழுங்க வேண்டி சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் கலந்து விநியோகம் செய்யபட்டு வருகிறது. மேற்படி சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் 202 2-2023ம் ஆண்டு சப்ளை செய்ய மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. குடிநீர் பணியின் அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கான மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்தினை குடிநீர் வழுங்கல் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு- மன்ற அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் . 977/இ1/2022**

**பொருள் எண்.12**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக பணிகளில் அவ்வப்போது ஏற்படும் குழாய் உடைப்புகள் மற்றும் பொதுக்குழாய் குடிநீர் இணைப்புகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய 202 2-23 ஆம் ஆண்டிற்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஆகும் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.9 90000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் . 977/இ1/2021**

**பொருள் எண்.13**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள 104 எண்ணிக்கை சிறு மின் விசைப்பம்புகள் மற்றும் 296 எண்ணிக்கை இந்தியா மார்க் – II கை பம்புகளை பராமரிக்க நகராட்சிகளில் போதிய ஆட்கள் இல்லாத காரணத்தினால் குடிநீர் பணியின் அவசியம் கருதி மேற்படி சிறுமின் விசைப்பம்பு மற்றும் கைபம்புகளிலும், கழிவறையில் உள்ள மின் மோட்டார் ஆகியவைகளை 202 2–23 ஆம் ஆண்டிற்கு பாரமரிப்பு பணி மேற்கொள்ள தோராய செலவினம் ரூ. 10..00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 18 வரை உள்ள கைப்பம்பு, சிறுமின் விசைப்பம்பு கழிவறை மின்மாட்டார் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 5.00 |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 முதல் 36 வரை உள்ள கைப்பம்பு, சிறுமின் விசைப்பம்பு கழிவறை மின்மாட்டார் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 5.00 |
| | மொத்தம் | 10.00 |

**அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**ந.க.எண்.977/இ1/2021**

**பொருள் எண்.14**

அரக்கோணம் நகராட்சியில் பொறியியல் பிரிவில் கீழ்குறிப்பிட்ட வாகனங்களுக்கு அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்யவும், 2022 ஆம் ஆண்டிற்கு காப்பீட்டு பிரிமியம், தகுதி சான்று பெறுதல், சாலை வரிகள், பசுமை வரி செலுத்த தோராய செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | TN 73 W8881 ஹைட்ராலிக் லேடர் தெருவிளக்கு பராமரிப்பு வாகனம் | 3.00 |
| 2 | ஈப்பு வாகனம் TN73T4896 | 2.00 |
| 3 | TN73AY4096 ஜெட்ராடிங் இயந்திரம் (பாதாள சாக்கடை) | 4.00 |
| 5 | ஈப்பு வாகனம் TN73W5969 | 2.00 |

**அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் . 977/இ1/2021**

**பொருள் எண்.15**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் பயன்படுத்தப்பட்டு வரும் 40 W குழல் விளக்குகள் – 180 எண்ணிக்கைகள், கையடக்க குழல் விளக்குகள் ( CFL) – 1350 எண்ணிக்கைகள், LED விளக்குகள் – 1350 எண்ணிக்கைகள் மற்றும் உயர்கோபுர மின் விளக்குகள் – 150 எண்ணிக்கைகள் என மொத்தம் 2650 தெரு மின் விளக்குகள் பயன்பாட்டில் உள்ளது. 2022–23 ஆண்டிற்கான மேற்கண்ட தெரு விளக்குகளின் பராமரிப்பு பணி மேற்கொள்ள மின் உதிரிபாகங்கள் வாங்க தோராய செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.**

2) தெருவிளக்கு மற்றும் அதன் உதிரிபாகங்கள் அரக்கோணம் கூட்டுறவு சிறப்பங்காடியில் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.048 /2022/இ1)

**பொருள் எண் :16**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறுடன் கூடிய கைப்பம்புகள் அவ்வப்போது பழுது ஏற்படுவதால் பொது மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய கைப்பம்பு உதிரிபாகங்கள் வாங்க வேண்டியுள்ளது. 2022–23 ஆம் ஆண்டிற்கான தோராய மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி வேலைக்கும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு: **1) மன்றம் அனுமதிக்கலாம்.**
**2) மேற்படி உதிரிபாகங்கள் அரசு அங்கீகாரம் பெற்ற டான்சி நிறுவனத்தில் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.**

ந.க.எண். 048 /2022/இ1

**பொருள் எண் :17**

இந்நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் Untied Grant 2021–2022 ஆம் ஆண்டிற்கு கீழ்காணும் பணிகளுக்கு 20.01.2022 அன்று ஒப்புந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | **பொது நிதி** | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | **வார்டு எண்**.04 **தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பகுதியில் யோகா மையம் அமைத்தல்** | 7.00 | திரு.வி சதிஷ்குமார் | 0.01% | திரு.எஸ்.ரமேஷ்பாபு | 0.47% |
| 2 | வார்டு எண்.**04** தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பகுதியில் **உடற்பயிற்சி கருவிகள் விநியோகம் செய்து பொருத்தி தருதல் மற்றும் பேவர் பிளாக்கில் தரை பூச்சு அமைத்தல்** | 5.00 | திரு.வி சதிஷ்குமார் | 0.04% | திரு.எஸ்.ரமேஷ்பாபு | 0.83% |

அலுவலக குறிப்பு: **வரிசை எண்1 .முதல் 2 வரையிலான பணிகளுக்கு மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்**

(ந.க.எண்.913/இ1/2021)

**பொருள் எண் :18**

இந்நகராட்சியில் பொது நிதி 2021–22 ஆம் ஆண்டிற்கு கீழ்காணும் பணிகளுக்கு 13.01.2022 அன்று ஒப்புந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | **பொது நிதி** | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நகர மன்ற கூடம், நகர மன்ற தலைவர் அறை மற்றும் ஆணையாளர் அறை மராமத்து பணிகள் செய்தல். | 9.80 | திரு.வி சதிஷ்குமார் | 0.05% | திரு.எஸ்.ரமேஷ்பாபு | 1.05% |
| 2 | நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நகர மன்ற கூடம், நகர மன்ற தலைவர் அறையில் உள்ள மேஜை நாற்காலி மராமத்து பணிகள் செய்தல். | 9.60 | திரு.வி சதிஷ்குமார் | 0.16% | திரு.எஸ்.ரமேஷ்பாபு | 0.72% |

**அலுவலக குறிப்பு: வரிசை எண்1 .முதல் 2 வரையிலான பணிகளுக்கு மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.507/இ1/2021)**

**பொருள் எண் :19**

இந்நகராட்சியின் 2022–2023ம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடு ( Budget Estimate) தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 169 /பி3/2021**

**ஆணையர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**